## 3. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு.எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

*திரு. எஸ். ஜெயக்குமார்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவையின் 1993-94 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் இருபத்தி நான்காவது, இருபத்தி ஐந்தாவது மற்றும் இருபத்தி ஆறாவது அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 2 -மாநில ஆயத்தீர்வைத் துறை தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 15-காவல் துறை தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 16-தீயணைப்புப் பணிகள் தொடர்ச்சி

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* 1994-95 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21-4-1994 அன்று கோரப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம் - தொடர்ச்சி.

இன்றையதினம் விவாதம் முடிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. நான் நேற்றையதினமே முன்வரிசைத் தலைவர்களில் இரண்டொருவர் பேசிமுடித்தால் நல்லது என கேட்டுக் கொண்டிருந்தேன். எல்லோரும் இன்று பேசுவதிலேயே குறியாக இருந்தீர்கள். எனவே எல்லோரும் இன்று பேசுகிற காரணத்தால் நேரத்தின் நெருக்கடியை உணர்ந்து, அவரவர்களின் நேரத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு பேசி முடிக்கக் கேட்டுக் கொள்கிறேன். திரு.வே. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கை மீதும், ஆயத்தீர்வை மானியக் கோரிக்கை மீதும், தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கை மீதும் கருத்துக்களைக் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறையின் மானியக் கோரிக்கையினுடைய முன்னுரையில், 'மாணவர்கள் தொழிலாளர்கள் கலவரம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாகவே இது ஒருதலைப்பட்சமாக விமர்சிக்கிற விமர்சனம் ஆகும். எந்த ஒரு தொழிலாளியாலும் கலவரம் ஏற்பட்டது கிடையாது. பொதுவாக ஆலை முதலாளிகள் சட்டப்படியான